தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au

பேச்சுப் போட்டி 02-06-2018 ஆண்டு:- ஏழாம் வகுப்பு

இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம்.

## மகாகவி பாரதியார்

இருபதாம் நூற்றாண்டின் புகழ் பூத்த தமிழ்க்கவி பாரதியார். சொல் புதிது, பொருள் புதிது, அணிபுதிதாய் தமிழ் இலக்கியத்தின் போக்கை புதுமையாய்ப் படைத்த புரட்சிக்கவி அவரே. கவிதை உரைநடை இரண்டிலும் பாரதியாருக்குப் பின் புதுசக்தி பிறந்தது. புது ஊற்றுப் பெருகியது எனலாம். பாரதியார் 1882ம் ஆண்டு மார்கழி மாதம் பதினொராம் திகதி எட்டயபுரத்தில் பிறந்தார். அவரது இயற்பெயர் சுப்பிரமணியம். ஏழாவது வயதிலேயே கவிபாடும் புலமை பெற்றார். பதினொராவது வயதில் எட்டயபுரச் சமஸ்தான புலவர்கள் இவர் பாடிய கவியினை வியந்து "பாரதியார்" என்ற பட்டம் அளித்தனர். பதினொரு வயதில் பாரதியானவர் பின்னாளில் மகாகவியாகவும் தேசிய கவியாகவும் போற்றப்பட்டார்.

தமிழ் மொழி மேல் பாரதியார் கொண்ட பக்தியை அவர் பாடல்களில் காணலாம். தமிழ் மொழிக்கு வாழ்த்துப் பாடிய கவி அல்லவா அவர். "தேமதுரத் தமிழ் ஓசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" "சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவையும் கொண்டிங்கு சேர்ப்பீர்" என்று அவர் பாடிய வரிகள் தமிழ் மொழிப்பற்றை ஊட்டுகின்றன.

பாரதியார் சக்தி தாசர், எதையும் சக்தியின் வடிவமாகக் கண்டார். அவரது பக்தியை கலைமகள் துதி, நவராத்திரிப் பாட்டு, சிவசக்தி முருகன் பாட்டு ஆகியவற்றில் காணலாம். கண்ணன் பாட்டு, குயிற் பாட்டு, பாஞ்சாலி சபதம், ஆகியவை மிகுந்த உயர்வான இலக்கியங்கள். புதிய ஆத்தி சூடி, பாப்பாப் பாட்டு குழந்தைகளுக்கு அறிவூட்டி வழிகாட்டுவன. குழந்தைகளுக்காக பாடல்கள் பாடிய முதலாவது குழந்தைக்கவி பாரதியார் எனலாம்.

"கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில்யாங்கனும் பிறந்ததில்லை" என்று பெருமை கொண்டாடினார்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்

என்று மக்களை உழைப்பாளிகள் ஆக்க முனைந்தார். பாரதியார் பாடாத விடயங்களே இல்லை. பாரதியாரின் வழியில் உற்சாகத்துடன் நாமும் தமிழ் பயின்று நல்வழியுடன் நடப்போம்.

நன்றி வணக்கம்.